32

# சமூக ஊடகங்களும் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகளும

அனுதர்ஷி லிங்கநாதன்

ஆய்வுச் சுருக்கம்

உலகில் தொலைதூரத்தில் உள்ளவர்களுடன் தொடர்புகளைப் பேணச் சமூக ஊடகம் வழிகோலியது. சமூக ஊடகங்கள் இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இன்று அவை இன்றியமையாதவையாக மாறி வருகின்றன. ஆனாலும், முதலாளித்துவ, ஆணாதிக்க உலகில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் இந்தப் புதிய ஊடகங்கள் மூலம் நவீன வடிவம் பெறுகின்றன. குறிப்பாக, சமூக ஊடகங்கள் மூலமாக அதிக அளவில் இணையரீதியான வன்முறைகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன. நேர்மையாக கருத்துக்களை எதிர்கொள்ள முடியாதவர்கள் பாலியல் ரீதியான தாக்குதல்களை இணைய வெளியிலும் மேற்கொள்கின்றனர். இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளிலும் இணையவெளி வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இன்றைய இணைய உலகில் சமூக ஊடகங்கள் குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தன. அதனால், சமூக ஊடகங்களில் கிடைத்த உச்ச பட்ச சுதந்திரம் பெண்கள் மீது இணையவழி வன்முறைகள் நிகழ்வதற்கும் காரணமாகியது. இதற்காக எழுந்த மாதிரியாக இருபது தொடக்கம் நாற்பத்தைந்து வயதிற்குட்பட்ட ஐம்பது பெண்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆய்வின் மாதிரிகளாகப் பயன்படுத்தப்பட்டனர். அதேவேளை, இரண்டாம் நிலைத் தரவுகளும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறுதிசார் தகவல் ஆய்வு மற்றும் எண்சார் தகவல் ஆய்வு ஆகிய இரு ஆய்வு முறைமைகளும் இவ் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவெளியில் இயங்கும் பெண்களை முடக்குவதாகவும் பெண் என்ற காரணத்தினால் அவை நிகழ்த்தப்படுபவையாகவும் இவ்வாறான வன்முறைகள் அமைந்திருக்கின்றன என்பது ஆய்வின் முக்கிய பேறாகப் பெறப்பட்டது.

## 1. அறிமுகம்

### 1.1. புதிய ஊடகம்

உலகளாவிய ரீதியில் 70 வீதமான இளைஞர்கள் புதிய ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் என அண்மைய கணக்கெடுப்புக்கள் கூறுகின்றன. அதேவேளை, இலங்கையில் 52.8 வீதமான இளைஞர்கள் புதிய ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் என 2018 ற்கான யுனிசெப் (UNICEF)

அறிக்கை குறிப்பிடுகின்றது. இலங்கையில் புதிய ஊடகப்பாவனையானது மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருவதனை அவதானிக்கலாம். வெகுஜன ஊடகங்களால் வெளியிடப்படும் செய்திகளைக் கடந்து இன்று புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள் என்பன முக்கியத்துவம் பெறுவதனை அவதானிக்க முடியும். ஊடகங்களின் ஒருங்கிணைவு (Media Convergence) புதிய ஊடகத்தின் வளர்ச்சியினாலேயே சாத்தியமாகியது. இன்று மக்கள் மத்தியில் புதிய ஊடகங்கள் பெரும் செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றன. ஊடகப்பரப்பை சமூக ஊடகங்கள் உள்ளடங்கலான புதிய ஊடகங்கள் ஆக்கிரமித்திருக்கின்றன என்றால் அது மிகையல்ல. புதிய மற்றும் சமூக ஊடகங்கள் உடனுக்குடன் செய்தியை வழங்குகின்றன. புதிய ஊடகங்களில் தவறுகள் ஏற்பட்டால் அவற்றை ஒப்பீட்டு ரீதியாக உடனடியாக முன்வைக்க வாய்ப்புக்கள் உள்ளமை மிகவும் சாதகமான விடயமாகும்.

### 1.2. சமூக ஊடகங்கள்

சமூக ஊடகங்கள் இன்று தொடர்பாடல் துறையில் முதன்மை வகிக்கின்றன. இது கணினி மற்றும் ஸ்மாட் தொலைபேசிகள் மூலமான தொழில்நுட்பம் மூலம் தனிநபர் கணக்குகளை ஆரம்பிக்கக்கூடியவாறு உருவாக்கப்பட்டு வலையமைப்புக்கள் மூலம் இடம்பெறும் தொடர்பாடலாகும். இதற்கு முகப்புத்தகம், ருவிற்றர், கூகுல் பிளஸ், லிங்ட் இன், வைபர், வாட்ஸ் ஆப், இன்ஸ்ரகிராம், யூரியூப், பின்றறஸ்ற், வேர்ட் பிறஸ், சினப் சற் (Facebook, Twitter, Instagram, Youtube, Wikipedia, LinkedIn, Wordpress, Blogspot, Weibo, Pinterest, Foursquare, Google+, Snapchat& Tumblr) என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இவற்றில் பெரும்பாலான சமூக ஊடகங்கள் 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்திலேயே உருவாக்கப்பட்டன. சமூக ஊடகங்கள் மிகக் குறுகிய காலப்பகுதியில் பிரபலமடைந்துவிட்டன. இலங்கையில் உள்ள சமூக ஊடகங்களில், முகப்புத்தகம் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக ஊடகமாக உள்ளது. இது, 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 1.3. பிரஜைகள் ஊடகவியல்

பிரஜைகள் ஊடகவியல் என்பது தொழில்முறை ஊடகவியலாளர்கள் அல்லாத சாதாரண பிரஜைகளால் பொதுவான இயங்குதளங்களிலும் வெகுஜன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் (சமூக ஊடகங்கள்) போன்றவற்றிலும் பாரம்பரியமற்ற மூலங்கள் மூலம் ஊடகவியலில் தமது பங்களிப்பை வழங்கல் எனப் பொருட்கோடல் செய்யப்படுகின்றது. இதனை சாதாரண மக்களுடைய கருத்து வெளிப்பாட்டுக்கான ஒரு வடிவமாகக் கொள்ள முடியும்.

பிரஜைகள் ஊடகவியலின் ஆரம்ப மூலமாக வலைப்பதிதல்கள் காணப்படுகின்றன. இது 1990 இன் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்றது எனலாம். வலைப்பூப் பதிவர்கள் புதிய ஊடகமான பிரஜைகள் ஊடகவியல் சார்ந்த சூழலுக்கு ஏற்றவர்களாகக் காணப்பட்டனர். வலைப்பூக்கள் ஊடான பிரஜைகள் ஊடகவியல் செயற்பாடானது இலங்கையில் வளர்ச்சியடைந்து வருவதனைக் காணமுடியும். பெரும்பாலான பிரஜைகள் தமது கருத்துக்களை தமது தனிப்பட்ட வலைப்பூக்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனாலும், ஏனைய சமூக ஊடகங்களின் வளர்ச்சியின் காரணமாக வலைப்பூக்கள் அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தகுந்தது எனலாம்.

பிரஜைகள் ஊடகவியல் மூலம் குறிப்பிட்ட சிலருக்கென வரையறுக்கப்பட்டிருந்த ஊடகவியலானது, அனைவருக்கானதாகவும் மாறியிருக்கிறது. இதன் மூலம் கட்டுப்பாடின்றி அல்லது தணிக்கை இன்றிச் செய்திகளைப் பகிரக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சமூக ஊடகத்தின் தோற்றம், மிக வேகமான பிரஜைகள் ஊடகவியலின் வளர்ச்சிக்குக் காரணமாகியது. வெகுஜன ஊடகங்களினால் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஊடகவெளியை இன்று சமூக ஊடகங்கள் ஆக்கிரமித்திருக்கின்றன.

பூகோளமயமாக்கல் அதன் மூலமான தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் ஸ்மாட் கையடக்கத் தொலைபேசிகளின் அதிகரிப்பு பிரஜைகள் ஊடகவியலின் வளர்ச்சிக்குக் காரணங்கள் எனலாம். இன்று மக்கள் மத்தியில் புதிய ஊடகங்கள் பெரும் செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றன. ஊடகப்பரப்பைச் சமூக ஊடகங்கள் உள்ளடங்கலான புதிய ஊடகங்கள் ஆக்கிரமித்திருக்கின்றன. புதிய மற்றும் சமூக ஊடகங்கள் உடனுக்குடன் செய்தியை வழங்குகின்றன. பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை சமூக ஊடகங்கள் மூலமாகவே அதிகளவில் பிரஜைகள் ஊடகவியலில் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள்.

"பிரஜைகள் ஊடகவியல் தொடர்பான புதிய காலமானது, மொழியியல் ரீதியாக பல குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மேலும், செயலாண்மைத்திறன் மற்றும் சமூக அரசியல் விழுமியங்கள் குன்றியதாகவும் காணப்படுகின்றது. இங்கு மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் சுவாரசியமற்றவைகளாகவும், வெறும் உணர்ச்சிபூர்வமானதாகவும், பொருத்தமற்றதாகவும், உணர்வுகளைத் தூண்டக்கூடியதாகவும் உள்ளது" என பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல் என்ற கள ஆய்வறிக்கையில் குறிப்பிடும் ஆய்வாளரும் புதிய ஊடகச் செயற்பாட்டாளருமான சஞ்சன ஹத்தொட்டுவ "பிரஜைகள் ஊடகவியல் மூலம் ஆண், பெண் வேறுபாடின்றி, இன, சமய, சாதி, வகுப்பு வேறுபாடுகளின்றி தமது கருத்துக்களைச் சுயமாக வெளியிடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதுடன், சமூகம் பற்றிய பல்வேறு வகையான கருத்துக்களைப் புலப்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## 1.4. அரசியலும் சமூக ஊடகங்களும்

உலகளாவிய ரீதியில் இளைஞர்கள் அதிகளவில் சமூக ஊடகங்கள் மூலமான அரசியல் பங்குபற்றலை மேற்கொள்கிறார்கள். அரசியல் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தல், ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் போன்றவற்றை பிரஜைகள் தமது சமூக ஊடகங்கள் மூலமாக மேற்கொள்கின்றனர். சமூக ஊடகங்கள் மூலமான இளைஞர்களின் அரசியல் பிரவேசம் இலங்கையில் அதிகரித்து வருவதனை அவதானிக்கலாம். இலங்கையிலும் தேர்தல்களின்போது சமூக ஊடகங்கள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. வாக்காளர்கள் தமது வாக்குகளை வழங்குவதற்கு சமூக ஊடகங்கள் மூலமான கருத்துப் பரிமாற்றங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## 1.5. சமூக ஊடகங்களும் ஊடக அறமும்

அண்மைக் காலத்தில், சமூக ஊடகங்களில் பிரஜைகளின் செயற்பாடானது சமூகத்தில் முரண்பாடுகளையும் குழப்பங்களையும் விளைவிக்க வழிவகுத்து வருகின்றது. புதிய ஊடகங்களில் தணிக்கை இன்றிச் செய்திகளைப் பகிரக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றமை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவும் காரணமாகியுள்ளது. உச்சபட்சச் சுதந்திரம் ஊடக மற்றும் தனி மனித

அறத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. உறுதிப்படுத்தப்படாத செய்திகளைப் பகிர்தல், இணையக் குற்றங்கள், பிழையான அரசியல் செயற்பாடுகள், வன்முறையைத் தூண்டக்கூடிய செய்திகள் மற்றும் புகைப்படங்களைப் பகிர்தல், தனிநபர் தாக்குதல்க, போலிச் செய்திகள் மற்றும் தனிநபர் வெறுப்பை வெளிப்படுத்தல் என்பன இன்றைய சமூக வலைத் தளங்களை ஆக்கிரமித்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், புலமைத்திருட்டு மற்றும் இணையச் சுரண்டல் என்பனவும் இடம்பெற்றுவருவதனை அவதானிக்க முடிகின்றது.

## 1.6. இணையக் குற்றங்கள்

"இலங்கையில் இணைய உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கு எந்தச் சட்டங்களும் இல்லை. இணையதளங்களைத் தடை செய்வது எழுந்தமானமாக நடைபெற்றதோடு, அதைத் தடுக்குமாறு இணையச்சேவை வழங்குநர்கள் கேட்கப்பட்டிருந்தனர். அந்த இணையத் தளங்கள் உலகின் எங்கிருந்தும் அணுகப்படக்கூடியனவாக இருந்தன. இந்த உத்தரவுகள் ஆவணப்படுத்தப்படவில்லை" என சரித்த ஹேரத், (முன்னாள் செயலாளர், ஊடக மற்றும் தகவல் அமைச்சு (2012-2014)) பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல் கள ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார். இலக்கு வைக்கப்பட்டு, மாற்றுக்கருத்துக்களை வெளியிடும் இணையதளங்கள் அல்லது சமூக ஊடகங்களைத் தடைசெய்தல் போன்றன ஊடக சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடியவையாகும்.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் இணையக் குற்றங்கள் மிக வேகமாக அதிகரித்து வருவதாகச் ளுசை டுயமெய ஊழஅிரவநச நுஅநசபநஉல சுநயனைநௌள வுநயஅ (ளுடுஊநுசுவு) நிறுவன ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2017 இல் சமூக ஊடகங்கள் சம்பந்தமான 3,685 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவ் ஆய்வு தெரிவிக்கின்றது. சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் அதிகமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் அரங்கேற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத்தின் உத்தரவுடன் இலங்கையில் ஆபாச இணையதளங்களைத் தடைசெய்கின்ற நடைமுறை இருந்து வருகின்றது. இணையதளங்கள் மற்றும் ஏனைய இணைய வழி ஊடகங்கள் தொடர்பான பொருத்தமான சட்டங்களும் நெறிமுறைகளும் அறிமுகப்படுத்தப்படுதல் அவசியம்.

இணையத்தினூடாக ஒருவர் கேலிசெய்யப்பட்டாலோ, அச்சுறுத்தப்பட்டாலோ, மிரட்டப்பட்டாலோ, பாரபட்சத்திற்கு உள்ளாக்கப்பட்டாலோ அல்லது கட்டாயப்படுத்தப்பட்டாலோ, அது, இணையவழி வன்முறை எனக்கொள்ளப்படும். வன்முறையின் எல்லா வடிவங்களும் பால்நிலையின் பரிமாணத்தைக் கொண்டுள்ளன.

## 1.7. அடிப்படை ஊடகக்கல்வி

இலங்கையைப் பொறுத்தமட்டில், கல்வித் திட்டத்தில் ஆரம்பக் கல்வியில் ஊடகக்கல்வி கற்பிக்கப்படுவதில்லை. அண்மைக் காலங்களில் சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் 'தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும்' பாடசாலைப் பாடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அதுவும் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளிலேயே அது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவே, பெரும்பாலானோர் ஊடகக் கல்வி பற்றியோ ஊடக அறம் பற்றியோ தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பில்லை. இதுவும் ஊடக அறம் மீறிய செயற்பாடுகளுக்கு ஒரு

காரணம் எனச் சொல்லலாம். இருந்தாலும் தனிமனித அறம் மற்றும் விழுமியங்களைப் பேணுவோர், தமது சமூக ஊடகங்களின் மூலமான பிரஜைகள் ஊடகவியலிலும் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

1.8. இணையச் சட்டங்கள்

இலங்கையில் இணையவழிக் குற்றங்களுக்கு எதிராக பிரத்தியேகமான, வலுவான சட்டங்கள் இல்லாதபோதும் கூட, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். தண்டனைச் சட்டக்கோவையின் சட்டப்பிரிவு 345, 372 மற்றும் சட்டப்பிரிவு 483 ஆகிய பிரிவுகளின் கீழ் வரும் குற்றங்கள் இணையவழியில் நிகழ்த்தப்பட்டமை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் குற்றவாளிகளுக்கு எதிராகத் தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும். அதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) மற்றும் சைபர் குற்ற விசாரணை பிரிவு (Cyber Crime Branch) ஆகிய பிரத்தியேக வாய்ப்புக்கள் உள்ளன. எனினும், நீதி கிடைப்பதில் உள்ள தாமதம் இங்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. அதேவேளை சைபர் பிரிவினர் பல்வேறு இணைய மோசடிகள் மற்றும் இணைய வன்முறைகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். ஆனாலும், நீதியை அணுகுவதில் உள்ள தயக்க நிலை, பிரச்சினைகள் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சநிலை என்பன இதற்குத் தடைகளாக உள்ளன. குறிப்பாக, பாதிக்கப்படும் பெண்கள் இவ்வாறான சட்ட நடவடிக்கைகளை அணுகுவதில் உள்ள தயக்க நிலைக்கும் இவையே காரணமாக உள்ளன. எனினும், இணையத் தொழில்நுட்ப அறிவு என்ற மட்டத்தில் யோசிக்கும்போது அந்த அறிவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதனால் இவ்வாறான இணையக் குற்றங்களின்போது சான்றுகளைச் சேமித்தல், குற்றங்களை நிருபணம் செய்ய அவற்றைப் பயன்படுத்தல் போன்ற உபாயங்களின் முக்கியத்துவம் பற்றி அறிவு இங்கு வெகு குறைவாக உள்ளதனால், அவற்றைச் சரியாகச் சட்டத்துறைக்கு நிரூபிக்க முடியாத நிலையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாக உள்ளது. இதனால், குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையும் உருவாகின்றது.

1. ஆய்வு நோக்கம்

ஆய்வின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பிரதான நோக்கம்: சமூக ஊடகங்களில் பெண்கள் எதிர்நோக்கும் இணையவழி வன்முறைகளைக் கண்டறிதல்.
- துணை நோக்கங்கள்:
    - பெண்களிடம் காணப்படும் இணையவழி வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வுகள் தொடர்பாக ஆராய்தல்.
    - சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும் பெண்கள் எதிர்கொள்கின்ற இணையவழி வன்முறைகளை ஆராய்தல்.
    - பெண்கள் சமூக ஊடகம் மூலம் தமக்கு இழைக்கப்பட்ட வன்முறைகளுக்காக எடுக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகளைப் பரீட்சித்தல்.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சமூக ஊடகங்கள் குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தன. அதனால், சமூக ஊடகங்களில் கிடைத்த உச்சபட்ச சுதந்திரம் இணையவழி வன்முறைகள் நிகழ்வதற்கும் காரணமாகியது. குறிப்பாக, சமூக ஊடகங்களில் இடம்பெறும் இணையவழி வன்முறைகள் பொதுவெளியில் இயங்கும் பெண்களை முடக்குவதாகவும், பெண் என்ற காரணத்தினால் நிகழ்த்தப்படுபவையாகவும் அமைந்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல், பெரும்பாலான பெண்கள் தமக்கெதிரான வன்முறைகள் குறித்து விழிப்புணர்வற்றவர்களாக இருக்கின்ற அதேவேளை, சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

## 3. ஆய்வு வினாக்கள்

1. இலங்கையில் பெண்களுக்கெதிரான எவ்வாறான இணைய வழி வன்முறைகள் இடம்பெறுகின்றன?
2. எவ்வாறான இணைய வழி வன்முறைகளை சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும் பெண்கள் எதிர்கொள்கிறார்கள்?
3. பெண்கள் தமக்கு இழைக்கப்பட்ட இணையவழி வன்முறைகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்புள்ளதா?

## 4. ஆய்வு முறையியல்

எழுந்த மாதிரியாக இருபது (20) தொடக்கம் நாற்பத்தைந்து (45) வயதிற்குட்பட்ட ஐம்பது (50) பெண்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வின் மாதிரிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். இம்மாதிரிகளில் அரசியலில் உள்ள ப்த்துப் பெண்கள், பத்துப் பெண் ஊடகவியலாளர்கள், வேலைக்குச் செல்லும் பத்துப் பெண்கள், வேலைக்குச் செல்லாத பத்துப் பெண்கள், பல்கலைக்கழக மாணவிகள் பத்துப் பேர் என்றவாறாக மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டனர். நேர்காணல்கள், வினாக்கொத்து மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்காக ஆய்வுப்பரப்புடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய தகவல் மூலங்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறுதிசார் தகவல் ஆய்வு மற்றும் எண்சார் தகவல் ஆய்வு ஆகிய இரு ஆய்வு முறைமைகளும் இவ் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5. தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

பால்நிலை சார்ந்த மதிப்பீடுகளை உருவாக்குகின்ற சமூகத்தில் பெண்களும் சிறுமிகளும் வன்முறைகளையும் துஷ்பிரயோகங்களையும் எதிர்கொள்கின்றனர். பெண்களின் குரல்களை மௌனிக்கச் செய்வதற்கான ஆயுதமாக இன்றைய காலத்தில் இணையவெளி வன்முறைகள் அதிகரித்துவருகின்றன. இவை உளவியல் ரீதியான தாக்கங்களை அதிகம் ஏற்படுத்துகின்றன. இந்த இணைய வழி வன்முறைகள் இணையவெளிகளைக் கடந்தும் தொழில் மற்றும் நாளாந்த வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்துவனவாக இருக்கின்றன.

இணையவெளியில் பெரும்பாலான பெண்களும் சிறுமிகளும் தாம் எதிர்கொள்ளும் வன்முறை குறித்த புரிதல் அற்றவர்களாகவே இருக்கிறார்கள். அதேவேளை, உலகளாவிய ரீதியில் அரசியலில் பிரவேசிக்கும் பெண்கள், பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் அதிக அளவில் இணைய வழி வன்முறைகளை எதிர்கொள்பவர்களாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சமூக ஊடகப் பாவனை அதிகரித்த இன்றைய காலகட்டத்தில், சமூக ஊடகங்களின் ஊடான பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இணையக் குற்றங்கள் மிக வேகமாக அதிகரித்து வருவதாக Sri Lanka Computer Emergency Readiness Team (SLCERT) நிறுவன ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், 2017 ஆம் ஆண்டில் சமூக ஊடகங்கள் சம்பந்தமான 3,685 சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அவ் ஆய்வு தெரிவிக்கின்றது. சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் இணையவெளி வன்முறைகள் என்னும்போது, பெரும்பாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளையே அரங்கேற்றுகின்றனர். குறிப்பாக, அரசியல் போன்ற பொதுவெளியில் பிரவேசிக்கும் பெண்களே அதிகமான தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர்.

அரசியலில் உள்ள பத்துப் பெண்களை ஆய்வாளர் ஆய்வுக்குட்படுத்தியதில் ஒன்பது பெண்கள் தாம் இணைய வன்முறைகளை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டனர். இதில் பெரும்பாலானோர் இணைய வன்முறை தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்கின்ற போதிலும் ஒரு சிலரே சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

அரசியல் செயற்பாட்டாளரான நளினி ரட்னராஜாவுக்கு எதிரான சமூக ஊடகங்களூடான தனிப்பட்ட தாக்குதல்கள், பெண் என்ற ரீதியில் இடம்பெற்றவையாக இருக்கின்றன. அவருடைய தனிப்பட புகைப்படங்களைப் பகிர்ந்தும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியும் சமூக ஊடகங்களில் பலரும் வன்முறைகளில் ஈடுபட்டனர். சமூக வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் இதனைப் பலரும் அவதானித்திருக்கக்கூடும். ஆணாதிக்கவாதிகளின் பெண்களை நசுக்க முனையும் தாக்குதல்கள் இணையவெளியில் போலி முகநூல்களின் துணையுடன் அதிகரித்துள்ளன.

"பேர் ஊர் தெரியாத நபர்களால் ஆதாரமில்லாத, அபாண்டமான பாலியல்ரீதியான தாக்குதல்கள் தன்மீது சுமத்தப்பட்டது'' என நளினி ரட்னராஜா (2021) தெரிவித்தார். மேலும், தான் தமிழர்களுக்கு எதிரானவர் எனவும் விமர்சிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். தனக்கெதிரான தாக்குதல்களைப் பலரும் தனிப்பட்டரீதியில் நளினிக்கெதிரானது என மௌனம் காத்ததாகத் தெரிவிக்கும் அவர், இது தனக்கெதிரானது மட்டுமல்ல ஒட்டுமொத்தப் பெண்களுக்கும் எதிரான விடயம் எனவும், அரசியலில் பிரவேசிக்க முனையும் பெண்களுக்கு இது அச்சுறுத்தலாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் அரசியற் கட்சியொன்று சார்பில் கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும் சட்டத்தரணியுமான மங்களேஸ்வரி சங்கர் (2021) - முகப்புத்தகம், மெசஞ்சர்ஸ், வாட்ஸ் ஆப் ஆகிய சமூக ஊடகங்கள் மற்றும் சில இணையதளங்கள் போன்றவற்றினால் தான் தாக்குதல்களை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டார். சமூக ஊடகங்களினூடான வன்முறைகள் குறிப்பாகத் தனிநபர் தாக்குதல்கள், போலிச்செய்திகள் போன்றன அரசியலில் உள்ள பெண்களுக்கும்

அரசியலுக்குள் நுழைய விரும்பும் பெண்களுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தேர்தலுக்குப் பின்னரும் சமூக ஊடகங்களுடான தாக்குதல்கள் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சிகளாலும் அவற்றினுடைய ஆதரவாளர்களாலும் உருவாக்கப்படும் போலி முகநூல் கணக்குகள் மூலம் மாற்றுக் கட்சிப் பெண்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர் எனவும், பெண்களுடைய பெயர்களில் ஆண்கள் முகநூல் கணக்குகளை உருவாக்கி அவதூறுகளைப் பரப்புதல் மூலம் பெண்கள் பெண்களுக்கு எதிரானவர்களாக இருப்பதாகவும் காட்டிக்கொள்வதாகவும் மங்களேஸ்வரி தெரிவித்தார். அதேவேளை, தனது தனிப்பட்ட மெசஞ்சர்ஸ், வாட்ஸ் ஆப் போன்றவற்றுக்கு அதிகாலையில் போலிப் பெயர்களில் அனுப்பப்படும் மோசமான போலிச் செய்திகள் அந்த நாளையே மோசமானதாக மாற்றிவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமூகத்தின் காவலர்களாக இருப்பவர்களின் சமூக ஊடகங்களின் மூலமான தாக்குதல்கள் பொதுவெளியில் பெண்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. அரசியலில் உள்ள பெண்களுடைய நடை, உடை, பாவனை போன்றவற்றையும் சம்பந்தப்பட்ட நபர்கள் மோசமாக விமர்சிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது என்பது மற்றுமொரு பெண் அரசியல் செயற்பாட்டாளரின் கருத்தாக இருக்கிறது.

"ஒருவர் மீது குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கும்போது, சுய சிந்தனையுடன் அறிவுபூர்வமாக முன்வைத்தல் அவசியம். பொய்களின் அடிப்படையிலும் உணர்வு ரீதியிலும் விமர்சனங்களை முன் வைத்துச் சமூகத்தில் குழப்பங்களையும் போலிப் பிரசாரங்களையும் முன்வைக்கின்றனர்" எனப் பாராளுமன்றத் தேர்தல் பெண் வேட்பாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

அநீதி இழைப்பவர்கள் மட்டுமல்ல அநீதிக்குத் துணை போகின்றவர்களும் அநீதியாளர்களே என்பது நீதி. இணையக்குற்றங்களுக்கு எதிராக மௌனம் காக்காது தனிப்பட்ட ஒவ்வொருவரும் செயற்படும் போதுதான் குற்றவாளிகளை இனங்காண்பதுடன் பெண்களுக்கான ஆரோக்கியமான பொது வெளியை உருவாக்க முடியும் என பிரதேச சபை பெண் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

யுனெஸ்கோ மற்றும் ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச நிலையம் (ICFJ) ஆகியன இணைந்து 113 நாடுகளைச் சேர்ந்த 714 பெண் ஊடகவியலாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 வீதமான பெண் ஊடகவியலாளர்கள் இணைய ரீதியான பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வாளர் ஆய்வுக்குட்படுத்திய பத்து ஊடகவியலாளர்களில் ஒன்பது பேர் இணையவழி வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதுடன், அவர்கள் இணையவழி வன்முறைகள் தொடர்பில் அறிந்தும் வைத்திருக்கிறார்கள். ஆனால், இதில் இணைய வன்முறைகளுக்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை ஒரு சிலரே மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் பெரும்பாலான பெண் ஊடகவியலாளர்கள் இணையத்தையும் சமூக ஊடகங்களையும் பயன்படுத்துகின்றனர். அத்துடன், பலர் இணையத்தள ஊடகவியலாளர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். இவர்களில், பெரும்பாலான பெண் ஊடகவியலாளர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் சமூகத்தில் அதிகளவில் பாதிக்கப்படுவதுடன் பாலியல் ரீதியான வன்முறைகள்,

தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நேரடியாக முகங்கொடுத்துவரும் அதேவேளை, இணைய ஊடகங்கள் மூலமாகவும் எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் இது அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றதாகவும் குறிப்பிட்டனர்.

"ஊடகவியலாளர் என்ற பொதுவெளிக்கு அப்பால், பெண் ஊடகவியலாளர் என்ற அடிப்படையில் நான் இணைய வன்முறைகளை எதிர்கொண்டிருக்கின்றேன்" என்கிறார் சுயாதீன ஊடகவியலாளரான பிரியதர்சினி சிவராஜா (2021). "குறிப்பாகச் சொல்வதானால், நான் எனது முகநூல் பக்கத்தில் அரசியல் விடயங்கள், பால்நிலை சமத்துவம் மற்றும் பால் புதுமையாளர்கள் பற்றிய தகவல்களை அல்லது அவை சம்பந்தமான கருத்துக்களைப் பதிவிடும்போது பலவாறான வெறுப்புப் பேச்சுக்களையும் எனது இன்பொக்சில் தவறான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய இழிவான கருத்துக்கள் தொடர்ச்சியாக வருவதனையும் நான் அவதானித்திருக்கின்றேன். மேலும், எனது குடும்பம், தனிப்பட்ட செயற்பாடுகள், எனது ஆளுமை என்பனவற்றைக் கேலிக்குட்படுத்தும் வகையிலும், சவால்களுக்குட்படுத்தும் விடயங்களாக அவை உள்ளன. அதுமட்டுமல்லாமல் ஹேக்கர்களின் அத்துமீறல், தனிப்பட்ட படங்கள், தகவல்கள் திருடப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்படல் போன்றவை தொடர்பான முறைப்பாடுகளை நான் எனது சக பெண் ஊழியர்களிடமிருந்து அடிக்கடி அறிகின்றேன்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

"பெண்களுக்கெதிரான இணைய வன்முறைகள் ஊடகத்துறையில் பெண்களின் வகிபாகத்தையும் பங்குபற்றலையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. பால்நிலைச் சமத்துவம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் சுயாதீன அறிக்கையிடலுக்கான அச்சுறுத்தலாகவே பெண் ஊடகவியலாளர்களுக்கெதிரான பல்வேறு வடிவங்களில் இடம்பெறும் வன்முறைகளைப் பார்க்கவேண்டியிருக்கிறது" என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர்.

"நான் சுதந்திரமாக எழுதுவதற்கு தடையாகவும் அச்சுறுத்தலாகவும் இணைய வன்முறைகள் இருக்கின்றன" என்கிறார் ஊடகவியலாளரான பிரியா நடேசன் (2021). "நான் அதிகமாகப் பெண்கள் பிரச்சினைகள் சார்ந்தே எழுதுவேன். அந்த நேரங்களில் ஆணாதிக்கச் சமூகத்தினரால் மிக நெருக்கடிகளைச் சந்தித்துள்ளேன். பலர் என்னைத் தனிப்பட்டரீதியில் தாக்க முயன்றுள்ளதோடு, பல இணையத்தினூடான மற்றும் நேரடி விமர்சனங்களையும் செய்துள்ளதோடு உயிர் அச்சுறுத்தல் நிலமை கூட ஏற்பட்டது" என்றும் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் மற்றும் பெண்ணுரிமை குறித்துச் செயற்படும் ஊடகவியலாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண் என்ற ரீதியில் இணையவழித் தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக, சமூக ஊடகங்களில் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை விமர்சிக்கப்படுவதை அவதானிக்க முடியும்.

"நான் பெண்களது பிரச்சினைகள் தொடர்பில் இயங்குவதால் பொதுவெளியில் என்னைப்பற்றி தவறாகவும் என்னுடைய புகைப்படங்களை தவறான முறையில் தயாரித்தும் பகிர்ந்துள்ளார்கள்" என்கிறார் சுயாதீன ஊடகவியலாளரான கேஷாயினி எட்மண்ட் (2021). "எனது அனுபவங்கள் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற அவதானத்தை தோற்றுவித்துள்ளது. அதேவேளை, என் சக நண்பிகளிடம் இணையவழி வன்முறைகள் ஒருவித பயத்தினைத் தோற்றுவித்துள்ளமையையும் அறியமுடிந்தது." எனவும் கேஷாயினி குறிப்பிட்டார்.

இணையவழி வன்முறைகள் பெண் ஊடகவியலாளர்களுடைய தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் வேறுபட்ட அனுபவங்களை ஏற்படுத்துகின்றன. ஒருவர் மீது குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கும்போது சுய சிந்தனையுடன் அறிவுபூர்வமாக முன்வைத்தல் அவசியம். பலர் பொய்களின் அடிப்படையிலும் உணர்வு ரீதியிலும் விமர்சனங்களை முன்வைத்துச் சமூகத்தில் குழப்பங்களையும் போலிப் பிரசாரங்களையும் முன்வைக்கின்றனர். இணையவெளியில் உளவியல் ரீதியான வன்முறைகளை பிரயோகிக்கின்ற பலர் அதன் தொடர்ச்சியாக நேரடி வன்முறை வரை செல்கின்றனர். அடிப்படைவாதிகள் பல ஊடகவியலாளர்களின் குரல்களை மௌனிக்கச்செய்வதற்குரிய ஒரு கருவியாக இணையத்தைக் கையிலெடுக்கின்றனர்.

"இணைய வன்முறைகள் என்னை மனதளவில் பாதிக்கின்றன. உதாரணத்திற்கு, முஸ்லிம் திருமண விவாகரத்து சட்டத்தினைப் பற்றி எழுதினால், இன அடிப்படையிலான வெறுப்பு பேச்சுக்களை எதிர்கொள்வதானது என்னுள் சில பின்னடைவுகளை ஏற்படுத்துவதுடன், அவை தொடர்பான தேடல்களுக்கு தடையாகவும் உள்ளது. இது போன்று பல விடயங்களை உதாரணமாக எடுத்துக் கூற முடியும். தனிப்பட்ட ரீதியில் எனது நடத்தை மற்றும் செயற்பாடுகளை நான் எழுதும் விடயங்களுடன் தொடர்புப்படுத்தி விமர்சிக்கும்போது அதனை எதிர்கொள்வது என்பது உள ரீதியிலான தடுமாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. அத்துடன், நான் இணையவெளியில், முகநூலில் சுதந்திரமாக செயற்படுவதனைத் தடுக்கும் செயற்பாடாகவும் உள்ளது. நான் எதனைப் பதிவிட்டாலும் என்னைப் பின்தொடர்ந்து இணைய வன்முறைகளை மேற்கொள்ளும் ஒரு குழு இயங்குகின்றது என்ற முன்னெச்சரிக்கை எண்ணம் எனது செயல்களில் ஒரு பின்னடைவினை ஏற்படுத்தி விடுகின்றது. மேலும், இவை நேரடியான அச்சுறுத்தலாகி விடுமோ என்ற அச்சநிலையும் உள்ளது. இது, எனது இணைய சுதந்திரத்தினைப் பாதிக்கும் விடயமாகும். அத்துடன், எனது அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்திரத்தினை முழுமையாகப் பாதிக்கின்ற விடயமாகும்." எனவும் பிரியதர்சினி சிவராஜா குறிப்பிட்டார்.

"இந்தப் போக்குகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சட்டத்தில் வாய்ப்பிருப்பினும் நடைமுறைப்படுத்துவதில் அசமந்தப் போக்கிருப்பதாக உணரமுடிகிறது" என்கிறார் கேஷாயினி எட்மண்ட. இதுபோன்ற அனுபவங்களை சில பெண் ஊடகவியலாளர்கள் பெற்றிருக்கிறார்கள். பொலிஸ் நிலையங்கள் கூட முறைப்பாடு செய்யவருபவர்களையும் முறைப்பாடுகளையும் சரியான முறையில் கையாள்கின்றனவா என்பதும் இலங்கை போன்ற நாடுகளில் கவனிக்கவேண்டிய ஒரு விடயமாகும். ஆனாலும், இணைய வழி வன்முறைகள் குறித்தும் அக்குற்றங்களுக்கு எதிரான சட்டநடைமுறைகள் குறித்தும் பெரும்பாலான பெண் ஊடகவியலாளர்கள் அறிந்தே வைத்துள்ளனர் என்பது முன்னேற்றகரமான விடயமாகும்.

வேலைக்குச் செல்லும் மற்றும் பொதுவெளியில் செயற்படும் பத்துப் பெண்களை ஆய்வுக்குட்படுத்தியதில், அவர்களில் எட்டுப் பெண்கள் இணைய வழி வன்முறைகளை எதிர்கொண்டவர்களாக இருக்கின்றனர். அதேநேரம், அவர்களில் பெரும்பாலானோர் இணையவழி வன்முறை தொடர்பில் விழிப்புணர்வு உடையவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், பெரும்பாலானோர் தமக்கு இழைக்கப்பட்ட இணையவழி வன்முறைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதில் பின்நிற்பவர்களாக இருக்கிறார்கள்.

"இன்றைய சமூக வலைத்தளங்கள் மூலம் இதனை அவர்களுக்கு இலகுவாகச் செய்து

முடிக்கக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய மனப்பிறழ்வாளர்களுக்கு, "Fake ID" பாவனை ஒரு சிறந்த வரப்பிரசாதமாகவும் அமைந்து விடுகிறது. அரசியல் களத்தில் இருக்கும் ஆண்களை விட ஏன் பெண்கள் மிக அதிகமாகவும் மோசமாகவும் தாக்குதல்களை எதிர்கொள்ள நேர்வதன் பின்னால் உள்ள உளவியல் என்ன? பெண்ணை யாரும், எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்றும், பெண்கள் எப்போதும் கலாசாரக் காவிகள், அவர்களைப் பாதுகாப்பது தங்கள் வசம் உள்ள பொறுப்பு என்றும் நினைக்கின்ற ஒருவித ஆண்மையத் திமிர்த்தனமும், இதனை இயல்பான ஒன்றாக ஏற்று இலகுவாகக் கடந்துபோகும் சமூக மனநிலையும்தான் இத்தகைய பெண்கள் மீதான சமூக வன்முறைகளை நிலைபெற வைக்கின்றன." என்கிறார் இலங்கை, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிகள் துறையின் விரிவுரையாளரான லறீனா அப்துல் ஹக், (2021).

"சமூகத்தளத்திலே ஆண்-பெண் பேதமின்றி, முற்போக்குச் சிந்தனை உடைய அனைவர் மத்தியிலும் இதனைப் பற்றிய பிரக்ஞை உணர்வும் விழிப்புணர்வும் பரவலாக்கப்படுவதன் மூலமும், கருத்து வேறுபாடுகளைத் தாண்டிய ஒருங்கிணைந்த கூட்டுச் செயற்பாடுகள் மூலமுமே இத்தகைய வன்முறைகளை மிக வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடிக்கக் கூடியதாக இருக்கும் எனக் கருதுகிறேன்" எனவும் லறீனா குறிப்பிட்டார்.

Facebook Messengers மூலம் அதிகம் இணைய வழி வன்முறைகள் இடம்பெறுவதாக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டார். தான் இணைய வழி வன்முறைகளை எதிர்கொண்டதாகக் குறிப்பிடும் அவர், தாம் தமக்கு எதிரான வன்முறைகளின் போது குயஉநடிழழம் நிறுவனத்திடம் முறையீடு செய்வதாகவும், Facebook; இல் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, இவ் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிடுகையில், தாம் இணையவழி வன்முறைகளை எதிர்கொண்டதாகக் குறிப்பிடும் அவர், அது தொடர்பில் சட்ட உதவியை நாட ஒருபோதும் விரும்பியதில்லை எனக் குறிப்பிட்டார்.

ஆய்வில், வேலைக்குச் செல்லாத பத்துப் பெண்களில் எட்டுப் பேர் இணையவழி வன்முறைகளை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டனர். சில பெண்களிடம் வினவியபோது, இணைய வன்முறைகள் தொடர்பில் அவர்கள் தமது தெளிவின்மையை வெளிப்படுத்தினர். சிலரிடம் இணையக் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அறிவு குறைவாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான பெண்கள் இணையவெளி வன்முறைகள் பற்றி ஓரளவேனும் அறிந்து வைத்திருந்தும், தமக்கெதிராக நடத்தப்பட்ட வன்முறைக்காகச் சட்டத்தை அணுகத்தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

பல்கலைக்கழக மாணவிகள் பத்துப் பேரில் 7 பேர் இணைய வன்முறைகளை எதிர்கொண்டவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலான பல்கலைக்கழக மாணவிகள் இணையவெளி வன்முறைகள் பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களும் தமக்கெதிரான வன்முறைகளுக்காகச் சட்டத்தை அணுகாதவர்களாகவே இருக்கிறார்கள்.

பல்கலைக்கழக மாணவியொருவர் குறிப்பிடுகையில், தான் பொதுவெளியில் இயங்கும் பெண் என்பதால் சமூக ஊடகங்கள் மூலம் இணைய வழி வன்முறைகளை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டார். ஆனால், தனது குடும்பத்தார் பாதிக்கப்படக்கூடும் என்பதற்காகவும் சமூகத்திற்குப்

பயந்தும் தனக்கெதிரான வன்முறைக்காகச் சட்ட நடவடிக்கை எதனையும் எடுக்கத் தான் முன்வரவில்லை எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை, மற்றுமொரு பல்கலைக்கழக மாணவி குறிப்பிடுகையில் தான் சமூக ஊடகங்களால் எதிர்கொள்ளும் இணைய வன்முறைகளைப் பெரிதாக எண்ணவில்லை எனவும், தான் அவற்றைச் சாதாரணமாகக் கடந்து செல்வதாகவும் குறிப்பிட்டார்.

6. முடிவுரை

இவ் ஆய்வுக்குட்படுத்திய ஐம்பது பேரில் நாற்பத்தியொரு பெண்கள் இணைய வன்முறையை எதிர்கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்தவகையில், இவ் ஆய்வின் மூலம், 82 வீதமான பெண்கள் சமூக ஊடகங்கள் மூலமாக இணைய வழி வன்முறைகளை எதிர்கொள்பவர்களாக இருக்கிறார்கள். அத்துடன், இலங்கையில் இணையவழி வன்முறைகள் பற்றி அறிந்து வைத்திருக்கும் பெண்கள் கூட, அவர்கள் எதிர்கொண்ட வன்முறைகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கையை நாடாமை மிகப்பெரிய குறைபாடாக உள்ளது. பாதிப்பை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுதல் அவசியம். பாதுகாப்பான இணையப் பாவனை என்பது அடிப்படை மனித உரிமையாக உள்ளது. அனைவரும் இணையவழி வன்முறைகள் குறித்தும் அதை எவ்வாறு அணுகவேண்டும் என்பது குறித்தும் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஒவ்வொரு பிரஜையும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுதல் அவசியம். பிரஜைகள் தாங்கள் சார்ந்த சமூகத்தை மாத்திரம் அல்ல, அனைத்து மக்களையும் பாதிக்காத வகையில் தமது பதிவுகளைச் சமூக ஊடகங்களில் மேற்கொள்வது அவசியம். காயப்படுத்துகின்ற சொற்பிரயோகங்களைத் தவிர்த்தல், கட்டுக்கதைகள் மற்றும் போர் பற்றிய கட்டுக்கதைகள், மதப் பிரசாரங்கள், வன்முறைகளைத் தூண்டக்கூடிய விபரணங்கள் என்பவற்றைத் தவிர்த்து தமது பிரஜைகள் ஊடகவியலை முன்னெடுத்தல் வேண்டும். அதுமட்டுமல்லாமல், கருத்தியல் ரீதியான விவாதங்களைச் சமூக ஊடகங்களில் முன்னெடுக்க வேண்டும். அதை விடுத்து, தனிமனிதர்களையும் அவர்களுடைய வாழ்வையும் விமர்சித்தல் தவறானது. பால்நிலை ரீதியான சீண்டல்களும் தாக்குதல்களும் சமூக ஊடகக் கருத்தாடல்களில் தவிர்க்கப்படல் வேண்டும். பாலியல் ரீதியான வன்முறைகளைப் பதிவிடும் போது பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்களையும் புகைப்படங்களையும் தவிர்த்தல் அவசியம். முரண்பாட்டு உணர்திறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

இலங்கையில் இணையக் குற்றங்களுக்கெதிரான சட்டங்கள் வலுவானவையாக இல்லை. போலிக் கணக்குகள் தொடர்பில் முகப்புத்தக நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்தாலும், குறிப்பிட்ட முகப்புத்தகக் கணக்குகளை தற்காலிகமாகவே முடக்க முடியும். கொழும்பில் இயங்கும் இணையக் குற்றங்கள் தொடர்பான பிரிவுக்கு இது தொடர்பாக முறைப்பாடு செய்ய முடியும். இருந்தாலும், குறிப்பிட்ட போலி இணையத்தளங்களையும் சமூக ஊடகங்களையும் வெவ்வேறு நாடுகளில் இருந்து சம்பந்தப்பட்டோர் இயக்குவதால் அது சவால்மிக்கதாக இருக்கின்றது. இதனால், இதுபோன்ற இணையக் குற்றங்களைச் செய்யும் குற்றவாளிகள் எளிதில் தப்பித்து விடுகின்றனர்.

பொதுவாகவே, நமது சமூகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளை மிக இலகுவாகக் கடந்து செல்லும் ஒரு வித அலட்சிய மனோபாவம் காலங்காலமாகப் புரையோடிப்

போயுள்ளது. அது, எல்லோருக்கும் இலகுவான ஒன்றாகவும் இருக்கிறது. அதற்கு இணைய வழி வன்முறையும் விதிவிலக்கல்ல.

பழக்கத்திலுள்ள வசைச் சொற்கள் யாவும் பெரும்பாலும் பெண்ணின் பாலுறுப்புகளை மையப்படுத்தியவையாக இருப்பதையும், பெண்ணின் ஒழுக்கத்தோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக இருப்பதையும் நாம் காண்கிறோம். தவறு செய்யும் ஆணை வசைபாடக் கூட அவனுடைய தாயின் ஒழுக்கமே இழிவாடப்படுவது இதற்கொரு நல்ல உதாரணம். மொழி வழக்குத் தொடங்கி சடங்கு, சம்பிரதாயம், சமூகச் சட்ட திட்டங்கள் என அனைத்தும் பெண்ணை வன்மப்படுத்துவதில் பின் நிற்கவில்லை எனலாம். இந்நிலையில், ஊடகவியலாளர்கள், அரசியல் களத்தில் இறங்கும் பெண்கள், செயற்பாட்டாளர்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், பல்கலைக்கழக மாணவிகள் போன்றோரிடம் இந்தப்போக்குகள் அவர்களது சமூக மனநிலையைச் சற்று அசைத்துப் பார்க்கின்றன. பதற்றத்துக்குள் ஆழ்த்துகின்றன. காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டு வந்துள்ள "பெண்" பற்றிய பிம்பத்தை இந்தப் பெண்களின் பொதுத்தளச் செயற்பாடும் அரசியல் பிரவேசமும் கட்டுடைப்புச் செய்ய முனைகிறது. எனவே, தனது அதிகாரத்தின் கீழேயே பெண்களை எப்போதும் வைத்திருக்கப் பேராசை கொண்ட ஆண்மைய மனோபாவத்தினால் அதனை அவ்வளவு இலகுவாக ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதன் விளைவு, அத்தகைய பெண்களை மிக மோசமாக இழிவாடல் செய்து, அவர்களைப் பற்றிய அவதூறுகளைப் பரப்புவதாக ஊடகத்தளம் அமைந்துவிடுகிறது. அதற்கு, இணையம் அவர்களுக்கு இன்னமும் வாய்ப்பாக அமைந்து விட்டது. அதேநேரம், வேலைக்குச் செல்லாத பெண்களும் இணையம் பற்றிய ஆழ்ந்த அறிவு இன்மையால், இணையவழி வன்முறைகள் பற்றி அறியாதிருப்பதாகவே அவர்களுடைய பதில்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இணையவழி வன்முறைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக எவ்வாறு சட்டநடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் போதிய அறிவில்லாமல் இருக்கின்ற அதேநேரம், தமக்கு இழைக்கப்பட்ட இணைய வழி வன்முறைகள் குறித்து பேசப் பயப்படுபவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள்.

உசாத்துணை


ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகம், (2016). பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல், பன்னல், இலங்கை.

Abubakar, M., K, (2017). *"Factors affecting adoption of social media by women's non-governmental organizations"*. Retrieved from https://academicjournals.org/journal/IJLIS/article-abstract/5AC9ED066239

Azmawati Azman Azwan, Khan, E. Rachel. (2016). "*Social Media in Asia: Changing paradigms in communications*", Asian Congress for Media and Communication.

Arthur A. B. *"Media analysis techniques"* Revised edition, Sage Publications.

Chukwuere, E. J, Chukwuere, C. P. (2017). "The impact of Social Media on social lifestyle: A case study of university female students", *Gender and Behaviour*.

Earl .B. *"The Practice of social research"*, Eleventh Edition, Chapman University Thomson Wadsworth.

Roger D .W. & Joseph R. D. *"Mass media Research & Introduction"* Seventh Edition, United States of America.

Samarajiva, R. (2019). *"Communication policy in the age of Facebook: Challenges for South Asia"*, 'Maddhya Sankathana', Annual Academic Journal, Vol.1 Number 1, Ministry of Mass Media, Government of Sri Lanka.

*"The Legal Framework around Cyber Exploitation and Violence"*, Retrieved from http://www.bakamoono.lk/tm

*"What is Cyber Exploitation and Violence"*, Retrieved from http://www.bakamoono.lk/tm